# செய்தி வெளியீடு

## அகராதியியல் பன்னாட்டுக் கருத்தரங்கம்

கல்லூரி மாணவர்களிடையே அகராதி குறித்த விழிப்புணர்வை உண்டாக்கும் வகையில், தமிழ்நாடு அரசு செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் மற்றும் சென்னை இலயோலா கல்லூரி இணைந்து நடத்தும் ‘அகராதியியல் பன்னாட்டுக் கருத்தரங்கம்’ இலயோலா கல்லூரியின் இலாரன்சு சுந்தரம் அரங்கில், வருகிற 17.12.2018ஆம் நாள் திங்களன்று காலை 9 மணிக்குத் தொடங்கி நடைபெறவுள்ளது.

இலயோலா கல்லூரியின் முதல்வர் அருட்தந்தை ஆண்ட்ரூ சே.ச. அவர்கள் தலைமையில் நடைபெறும் கருத்தரங்கில், தமிழ்வளர்ச்சி (ம) செய்தித்துறை அரசு செயலாளர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்கள் தொடக்கவுரையாற்ற, அகரமுதலித் திட்ட இயக்கக இயக்குநர் திரு. தங்க. காமராசு அவர்கள் கருத்தரங்க நோக்கவுரையாற்றவுள்ளார்.

தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு. க. பாண்டியராசன் அவர்கள் பங்கேற்று, மாணவர்களின் சொல்லார்வத்தைத் தூண்டும் வகையில் வைக்கப்படவிருக்கும் ‘சொல் உண்டியலைத்’ திறந்து வைத்துச் சிறப்புரையாற்ற இசைந்துள்ளார்கள். கல்லூரியின் ஆங்கிலத்துறைத் தலைவர் முனைவர் கீ.சூ. அந்தோனிசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்க,

பாரிசு பன்னாட்டு உயர்கல்வி நிறுவனத் தலைவர் முனைவர் ச. சச்சிதானந்தம் அவர்கள் ‘உலக அகராதியியல் வரலாறு’ என்ற தலைப்பிலும், இலயோலா கல்லூரியின் ஆராய்ச்சிப் புல முதல்வர் முனைவர் எஸ். வின்செண்ட் அவர்கள், ‘சமுதாய நோக்கில் அகராதியியல்’ என்ற தலைப்பிலும், கார்க்கி ஆராய்ச்சி நிறுவனத் தலைவர் முனைவர் மதன்கார்க்கி அவர்கள், ‘மின் அகராதி உருவாக்கம்’ என்ற தலைப்பிலும் கருத்தரங்கக் கருப்பொருளுரையாற்றவுள்ளார்கள்.

அகராதியியல் வல்லுநர்கள், மொழியியலறிஞர்கள், தமிழார்வலர்கள், அகரமுதலித் திட்ட இயக்ககப் பணியாளர்கள், இலயோலா கல்லூரியின் அனைத்துத் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றுச் சிறப்பிக்கவிருக்கும் இப்பன்னாட்டுக் கருத்தரங்கில், இலயோலா கல்லூரித் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் து. மேரி சொர்ணாம்பாள் வரவேற்புரையாற்ற, நிறைவாக, கல்லூரியின் இணைப் பேராசிரியர் முனைவர் டேவிட் ஜெயபாலன் நன்றியுரையாற்றவுள்ளார்.

# அகரமுதலித் துறையின் வரலாறும் செயற்பாடுகளும்

**அகர முதல** எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

(திருக்குறள்: 1)

ஒரு நாட்டைக் காப்பதற்கு இராணுவ வீரர்கள் எவ்வளவு அவசியமோ, அதுபோல, மொழியைக் காப்பதற்குச் சொற்கள் அவசியம். சொற்களைப் பாதுகாத்துப் புழக்கத்தில் வைத்திருந்தால்தான் மொழியை உயிர்ப்புடன் வைத்திருக்க முடியும். மொழியில் வழங்கும் சொற்கள் அனைத்தையும் தொகுத்து ஆவணப்படுத்தி வைப்பது என்பது இனிவரும் தலைமுறையினருக்கு நாம் வழங்கும் 'மொழிச் சொத்து' ஆகும். சொற்களைச் சேர்த்து வைக்கத் தவறினால் அடுத்த தலைமுறையினரின் பயன்பாட்டிற்குச் சொல் பற்றாக்குறை ஏற்பட்டு, தன் தேவைக்கான சொற்களைப் பிற மொழிகளிடமிருந்து கடன் வாங்க வேண்டியிருக்கும். அவ்வாறு கடன் பெறும் சொற்களின் எண்ணிக்கை மிகுந்தால் தாய்மொழியின் தனித்தன்மை பாதிக்கப்படும். தமிழ்மொழியின் தனித்தன்மை பாதிக்காமல் இருக்க சொற்களைச் சேமித்துக்காக்கும் வைப்பகமாக (Bank of Words) செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்ககம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

தமிழ் அகராதியை உருவாக்குவதற்கென்றே தனி இயக்ககமாக செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் துறைத்தலைமை அலுவலகமாக (Head of the Department) 08.05.1974–ஆம் நாள் தமிழ்நாடு அரசால் தோற்றுவிக்கப்பட்டது. மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் முதல் இயக்குநராகப் பணியமர்த்தம் செய்யப்பட்டார்.

இந்த இயக்ககம் தமிழில் உள்ள சொற்களைத் தொகுத்து அந்தச் சொற்களுக்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொருள் விளக்கம் கூறி, இலக்கண இலக்கியங்களிலிருந்து தக்க சான்றுகளை எடுத்துக்காட்டி, அச்சொற்கள் தோன்றுவதற்குக் காரணமாக உள்ள வேர்ச்சொற்களையும், அதன் வழியே மக்களின் நாகரிகம், பண்பாடு, வாழ்க்கைமுறை, வரலாறு ஆகியவற்றையும் எடுத்தியம்புகிறது.

- தமிழ்நாடு அரசின் துறைத் தலைமை அலுவலகமாக இயங்கும் ''செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்'' இதுவரை 13,327 பக்கங்களைக் கொண்ட 31 அகரமுதலிப் பகுதிகளை வெளியிட்டுள்ளது.
- அகராதிகள் பத்தாண்டுகளுக்கு ஒரு முறை காலமேம்படுத்தம் (Update) செய்யப்பட வேண்டும் என்கிற அடிப்படையில் 31 அகரமுதலிப் பகுதிகளும் திருந்திய பதிப்பாக வெளியிடும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
- இன்றைய அறிவியல் தொழில்நுட்பக் காலத்தில் சமூக ஊடகங்களிலும், மக்களின் பேச்சு வழக்கிலும் கலந்து புழக்கத்தில் உள்ள பிறமொழிச் சொற்களையும், நாள்தோறும் பெருகி வரும் பலதுறை சார்ந்த பிறமொழிக் கலைச்சொற்களையும் தொகுத்து, அவற்றிற்கு இணையான நல்ல தமிழ்க் கலைச்சொற்களை வடிவமைப்பதற்கு இந்த அகரமுதலித்துறையில் ''தமிழ்க்கலைக் கழகம்'' ஒன்று உருவாக்கப்பட்டுச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது.
- அகரமுதலித்துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கும் பதிப்பாசிரியர்களாலும், தொகுப்பாளர்களாலும் தொகுக்கப்பட்டு, வடிவமைக்கப்படும் தமிழ்க் கலைச்சொற்கள், மாதம் இரு முறை நடைபெறும் தமிழ்க்கலைக்கழகக் கூட்டத்தின்போது, வல்லுநர் குழுவின் கூர்ந்தாய்வுக்குப்பின், தமிழ்நாடு அரசின் அரசாணை பெற்று, பொதுமக்கள் மற்றும் ஊடகத்தாரின் பயன்பாட்டுக்கு வழங்கப்படுகிறது.

- நடப்பு 2018ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற்ற 27ஆவது கூட்டம் வரை 11,926 சொற்கள் தொகுக்கப்பட்டு அவற்றில் 4,617 சொற்கள் அரசின் ஆணை பெற்று நூலாக்கம் செய்து வெளியிடப்பெறவுள்ளன.

- இளைய தலைமுறை பள்ளி மாணவர்களுக்குப் பிறமொழிக் கலப்பில்லாத தமிழை அறிமுகம் செய்யும் நோக்கில் உருவாக்கப்பெற்ற ''நற்றமிழ் அறிவோம்'' என்னும் தூய தமிழ் அகராதியை இவ்வியக்ககம் தயாரித்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் அனைத்துத் தொடக்கப் பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டன.

- ஆறாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்காக தூயதமிழ் அகராதியான ''நற்றமிழ் அறிவோம்'' உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது.

- செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் வெளியிட்டுள்ள 31 அகரமுதலிப் பகுதிகளின் சுருக்கப் பதிப்பு, 884 பக்கங்களைக் கொண்ட ஒரே பகுதியாக வெளியிடப்பட்டுள்ளது.

- தமிழில் உள்ள வினைச்சொற்களைத் தொகுத்து 408 பக்கங்களைக் கொண்ட ''தமிழ் வினைச்சொல் அகரமுதலி'' வெளியிடப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பிற போட்டித் தேர்வுகளில் பங்குபெறும் மாணவர்கள் பயன்பெறும் வகையில் ''வேர்ச்சொல் சுவடி'' எனும் நூல் வெளியிடப்பட்டுள்ளது.

- **அகரமுதலியை எண்மியமாக்கி வலைத்தளத்தில் வெளியிடும் பணி:**

இந்த இயக்ககம் இதுவரை வெளியிட்ட 13,327 பக்கங்களைக் கொண்ட 31 பகுதிகளையும் எண்மிய (Digitize)மாக்கி வலைத்தளத்தில் வெளியிடுவதற்குச் சட்டமன்ற அறிவிப்பு 2016–17ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அந்தப் பணி நிறைவடைந்து தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

- **(2018–19) ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்புகள்:**

1. நடைமுறைத் தமிழ்ப் பேரகரமுதலி
2. மாணவர் இலக்கியத் தமிழ் அகரமுதலி
3. தமிழில் வழங்கும் பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள் அகரமுதலி
4. தமிழ்க் கலைக்கழகத்தைப் புதுப்பித்து மாதம் இரு முறை வல்லுநர்கள் குழுக்கூட்டத்தை நடத்தி மாதத்திற்கு 1000 கலைச்சொற்களை உருவாக்குதல்
5. அலுவலகப் பயன்பாட்டிற்குப் பார்வை நூல் வாங்க ரூபாய் இரண்டு இலட்சம்
6. அலுவலக உள்கட்டமைப்புகளை மேம்படுத்திக்கொள்ள ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம்

- **பிற இயக்ககப் பணிகளுக்கும் இந்த இயக்ககப் பணிகளுக்குமான வேறுபாடு:**

1. மற்ற இயக்ககத்திற்கு ஒரு நூலைத் தயாரித்து வெளியிட அரசு ஆணை வழங்கினால் அந்த இயக்ககத்தினர் அந்த நூலைத் தயாரிப்பதற்கான அறிஞரை அணுகி அயலாக்கப் பணி

(Out Sourcing) வாயிலாக நிறைவுறுத்துவர். ஆனால், இந்த இயக்ககத்திற்கென வழங்கப்படும் திட்டங்களின் அடிப்படையில் உருவாக்கப்படும் நூல்கள் அனைத்துமே இந்த இயக்ககத்தின் பணியாளர்களான தொகுப்பாளர்கள், உதவிப் பதிப்பாசிரியர், பதிப்பாசிரியர்கள், கணிப்பொறியாளர்கள் ஆகியோரை உள்ளடக்கிய குழுவினரைக் கொண்டு இந்த இயக்கக இயக்குநரின் வழிகாட்டுதலின் அடிப்படையில் செயற்படுத்தப்படுகிறது.

2. இந்த இயக்ககத்தின் வாயிலாக வெளியிடப்படும் அனைத்துப் படைப்புகளுக்கும் அரசே பொறுப்பேற்க வேண்டியுள்ளதால், மிக மிகக் கவனத்தோடும், பிழையேதும் ஏற்பட்டுவிடக்கூடாது என்கிற விழிப்புணர்வுடனும் இந்த இயக்ககப் பணியாளர்கள் பணி செய்ய வேண்டிய பொறுப்பு உள்ளது என்பதே இந்த இயக்ககத்தின் பணிகளுக்கும் பணியாளர்களுக்கும் இயக்குநருக்கும் உள்ள தனிச்சிறப்பாகும்.

3. திராவிட மொழிகள் உள்ளிட்ட இந்தியாவில் பேசப்படும் பெரும்பாலான மொழிகளின் வேர்ச்சொற்கள் தமிழில் இருந்தே எடுத்துக் கையாளப்பட்டுள்ளன என்பதை நிரூபிக்கும் வகையில் சொற்களின் வேர்களைக் கண்டறிந்து அவற்றை அகராதியாகத் தொகுத்து வெளியிட வேண்டிய பெரும் பணி அகரமுதலி இயக்ககத்தைச் சார்ந்தது.

➢ **அகரமுதலி என்பது......**

- **தமிழ் மொழியின் ஆணிவேர்!**
- **தமிழ்ச் சொற்களின் பாதுகாப்பு அரண்!**
- **அனைத்துத் துறைகளின் புதிய தமிழ்க் கலைச் சொற்களையும் உருவாக்கும் அறிவுத் தொழிற்சாலை!**
- **தமிழ்ச் சொற்களின் வரலாற்றுப் பெட்டகம்!**
- **சொற்களின் காப்பகம்**
- **ஐயம் (சந்தேகம்) களையும் தீர்ப்பகம்**
- **சொல் தொடர்பாகத் தீர்ப்பளிக்கும் நீதிமன்றம்**
- **பண்பாட்டுப் பதிவகம்**

➢ அகரமுதலித்துறையின் வளர்ச்சி,

தமிழ்மொழியின் வளர்ச்சி!

தமிழர்களின் வளர்ச்சி!

எதிர்காலத் தலைமுறைக்கான வளர்ச்சி!

# செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்கக வெளியீடுகளின் விலைப் பட்டியல்

| தொ. எண். | புத்தகத்தின் பெயர் | படி ஒன்றின் விலை ரூ. | கழிவு 35% ரூ. | நிகர விலை ரூ. |
|---|---|---|---|---|
| | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி | | | |
| 1. | முதன் மடலம் முதற்பகுதி ‘அ’ | 100/– | 35/– | 65/– |
| 2 | முதன் மடலம் இரண்டாம் பகுதி ‘ஆ–ஈ’ | இருப்பில் இல்லை | - | .. |
| 3. | முதன் மடலம் மூன்றாம் பகுதி ‘உ–ஔ’ | 150/– | 52/– | 98/– |
| 4. | இரண்டாம் மடலம் முதற்பகுதி ‘க’ | 300/– | 105/– | 195/– |
| 5. | இரண்டாம் மடலம் இரண்டாம் பகுதி ‘கா–கூ’ | 300/– | 105/– | 195/– |
| 6. | இரண்டாம் மடலம் மூனறாம் பகுதி ‘கெ–ஙௌ’ | 300/– | 105/– | 195/– |
| 7. | மூன்றாம் மடலம் முதற்பகுதி ‘ச–சா’ | 300/– | 105/– | 195/– |
| 8. | மூன்றாம் மடலம் இரண்டாம் பகுதி ‘சி–சூ’ | 300/– | 105/– | 195/– |
| 9. | மூன்றாம் மடலம் மூன்றாம் பகுதி ‘செ–சௌ’ | 300/– | 105/– | 195/– |
| 10. | நான்காம் மடலம் முதற்பகுதி ‘த–தா’ | 300/– | 105/– | 195/– |
| 11. | நான்காம் மடலம் இரண்டாம் பகுதி ‘தி–தூ’ | 300/– | 105/– | 195/– |
| 12. | நான்காம் மடலம் மூன்றாம் பகுதி ‘தெ–தௌ’ | 300/– | 105/– | 195/– |
| 13. | ஐந்தாம் மடலம் முதற்பகுதி ‘ந–நா’ | 400/– | 140/– | 260/– |
| 14. | ஐந்தாம் மடலம் இரண்டாம் பகுதி ‘நி–நீ’ | 400/– | 140/– | 260/– |
| 15. | ஐந்தாம் மடலம் மூன்றாம் பகுதி ‘நு–நௌ’ | 400/– | 140/– | 260/– |
| 16. | ஆறாம் மடலம் முதற்பகுதி ‘ப–பா’ | 400/– | 140/– | 260/– |
| 17. | ஆறாம் மடலம் இரண்டாம் பகுதி ‘பி–பூ’ | 400/– | 140/– | 260/– |
| 18. | ஆறாம் மடலம் மூன்றாம் பகுதி ‘பெ–பௌ’ | 400/– | 140/– | 260/– |
| 19. | ஏழாம் மடலம் முதற்பகுதி ‘ம–மா’ | 400/– | 140/– | 260/– |
| 20. | ஏழாம் மடலம் இரண்டாம் பகுதி ‘மி–மூ’ | 400/– | 140/– | 260/– |
| 21. | ஏழாம் மடலம் மூன்றாம் பகுதி ‘மெ–மௌ’ | 400/– | 140/– | 260/– |
| 22. | எட்டாம் மடலம் முதற்பகுதி ‘ய–வ’ | 400/– | 140/– | 260/– |
| 23. | எட்டாம் மடலம் இரண்டாம் பகுதி ‘வா–வீ’ | 400/– | 140/– | 260/– |
| 24. | எட்டாம் மடலம் மூன்றாம் பகுதி ‘வெ–வௌ’ | 400/– | 140/– | 260/– |
| 25. | ஒன்பதாம் மடலம் –இணைப்பு மடலம் முதற் பகுதி ‘அ–ஔ’ | 400/– | 140/– | 260/– |
| 26. | ஒன்பதாம் மடலம் –இணைப்பு மடலம் இரண்டாம் பகுதி ‘ச–வௌ’ | 400/– | 140/– | 260/– |
| 27. | பத்தாம் மடலம் – அயற்சொல் முதற்பகுதி ‘அ–ஔ’ | 400/– | 140/– | 260/– |
| 28. | பத்தாம் மடலம் – அயற்சொல் இரண்டாம் பகுதி ‘க–டௌ’ | 400/– | 140/– | 260/– |
| 29. | பத்தாம் மடலம் – அயற்சொல் மூன்றாம் பகுதி ‘த–வௌ’ | 400/– | 140/– | 260/– |
| 30. | பதினொன்றாம் மடலம் – தமிழ் அகரமுதலி வரலாறு | 300/– | 105/– | 195/– |
| 31. | பன்னிரண்டாம் மடலம்–தமிழ்ச் சொற்பிறப்பு நெறிமுறைகள் | 400/– | 140/– | 260/– |
| 32. | செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகரமுதலி சுருக்கப்பதிப்பு | 1000/– | 350/– | 650/– |
| 33. | தமிழ் வினைச்சொல் அகரமுதலி | 500/– | 175/– | 325/– |
| | **மொத்தம்** | **11,950/–** | **4,182/–** | **7,768/–** |
| | **(ரூபாய் ஏழாயிரத்து எழுநூற்று அறுபத்து எட்டு மட்டும்)** | | | |

**குறிப்பு:** தொகையை ரொக்கமாக அல்லது வங்கி வரைவோலையாக/ காசோலையாக **“The Director, Directorate of Tamil Etymological Dictionary Project, Chennai – 600 113”** எனும் பெயரில் வழங்கலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**